சுருக்கம்

பள்ளிக் கல்வி - அரசுத் தேர்வுகள் இயக்ககம் - அரசுப் பொதுத்தேர்வுகள் எழுதும், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்கப்படும் இடைநிலை / மேல்நிலைப்பள்ளி மதிப்பெண் சான்றிதழ்களில் பாலின பெயர் மாற்றம் - உரிய திருத்தம் மேற்கொள்ள அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (அ.தே) துறை

அரசாணை (நிலை) எண்.237

நாள்: 05.11.2024,
திருவள்ளுவர் ஆண்டு 2055,
குரோதி வருடம், ஐப்பசி 19

13 NOV 2024

படிக்கப்பட்டவை:-

1. அரசுக் கடித எண்.9462/ஜிஇ1/2016-1, பள்ளிக் கல்வித் துறை, நாள்.15.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.177, பள்ளிக் கல்வி (அதே) துறை நாள் 23.12.2021.
3. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.010591/பி5(1)/2024, நாள் 18.09.2024

------

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், திரு.ஆர்.நரசிம்மன் என்பவர் உடல்ரீதியாக ஏற்பட்ட மாற்றத்தினை அறுவை சிகிச்சை மேற்கொண்டு திருநங்கையாக, அன்னாரது பெயரை அரசிதழ் அறிக்கையில் ஆர்.சிந்து நரசிம்மன் என மாற்றியுள்ளதன் அடிப்படையில், பள்ளி ஆவணங்கள் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் ஆகியவற்றில் பெயர் மற்றும் பாலினத்திலும் மாற்றம் செய்ய கோரும் கருத்துருவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து தக்க திருத்தம் வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளி இறுதித் தேர்வில் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்களில் முகப்பெழுத்து / பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் செய்வது சார்பான கருத்துருக்களை, சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களே ஆய்வு செய்து, அவர்கள் வழியாகவே அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுப்பி அரசுத் தேர்வுகள் துறை மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு, மாணவ/ மாணவியர்களின் இதர கல்விச் சான்றுகளில் பள்ளி அளவில் திருத்தங்களை மேற்கொள்ள சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலர்களே ஆணை வழங்கிட அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், அரசுத் தேர்வுகள் இயக்குநர் பின்வருமாறு தெரிவித்துள்ளார் :-

(i) 2012-ம் ஆண்டிலிருந்து தேர்வர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சிட்டு வழங்குவது நடைமுறையிலிருந்து வருகிறது.

(ii) மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பாலின மாற்றம் அடைந்த பிறகும் பழைய புகைப்படத்துடன் மதிப்பெண் சான்றிதழ் அச்சழுத்தம் செய்து வழங்குதல் என்பது அவர்களுக்கு பல நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளமையால், 2012-ம் ஆண்டிற்கு பிறகு தேர்வெழுதிப் பெற்ற

மதிப்பெண் சான்றிதழ்களாக இருக்குமாயின், அவர்களுக்கு புகைப்படமின்றி புதிய மதிப்பெண் சான்றிதழ் மறு அச்சழுத்தம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

(iii) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி, தற்போது தேர்வர்களின் பெயர்/முகப்பெழுத்து/ பிறந்த தேதி ஆகிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iv) தனித் தேர்வரை பொறுத்தமட்டில், அடிப்படை ஆவணங்கள் சரியாக இருந்து, இடைநிலை மதிப்பெண் சான்றிதழில் ஏதேனும் திருத்தம் கோரப்படின் இறுதியாக பயின்ற பள்ளி ஆவணங்களின் அடிப்படையில் மட்டும் உரிய திருத்தம் மேற்கொள்ளப்படும்.

(v) மூன்றாம் பாலினத்தவர்கள் பொதுவாக கீழ்க்குறிப்பிட்டுள்ள ஆவணங்களை இணைத்து சமர்ப்பித்து, தமது இடைநிலை / மேல்நிலை மதிப்பெண் சான்றிதழில் பெயர் பாலின மாற்றம் செய்து வழங்கக் கோருகின்றனர்:-

i. அசல் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு (if any) மதிப்பெண் சான்றிதழ் மற்றும் அதன் நகல். (Mark Statement).
ii. தமிழ்நாடு திருநங்கையர் நலவாரியம் / சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அடையாள அட்டை நகல் *
iii. பெயர் மாற்றம் செய்து வெளியிட்ட தமிழ்நாடு அரசிதழ் (அசல் மற்றும் நகல்) வெளியீடு.
iv. ஆதார் அட்டை நகல்.
v. அறுவை சிகிச்சை செய்தமைக்கான சான்று **
vi. Consultant Psychiatrist Report.
vii. Hormonal Treatment Certificate (if any).
viii. பாலின மாற்றத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் எடுத்த புகைப்படம் (தலா 2).

* தமிழ்நாடு திருநங்கையர் நலவாரியம் /சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அடையாள அட்டையானது மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்டு வருகிறது.

** மருத்துவமனை அல்லது கிளினிக், தனியார் அல்லது அரசு, கிராமப்புறங்களில் அல்லது நகர்ப்புறங்களில் அல்லது வெளிநாடுகளில் உள்ள மருத்துவ நிறுவனம் ஆகிய ஏதேனுமொன்றில் அறுவை சிகிச்சை செய்தமைக்கான சான்று.

4. மேலும், பொதுத்தேர்வுகளை எழுதும் மாணாக்கர்களுள் மூன்றாம் பாலினம் என மனுதாரர் தெரிவித்து பெயர் மாற்றம் கோரும் நிகழ்வுகளில், மருத்துவ அறிக்கை, அரசிதழ் வெளியீடு மற்றும் தமிழ்நாடு திருநங்கையர் நலவாரியம் / சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் வழங்கப்படும் அடையாள அட்டை அல்லது அரசால் வழங்கப்படும் ஏதேனுமொரு அடையாள அட்டை முதலிய ஆவணங்களின் அடிப்படையில், ஆய்வு செய்து, உறுதி செய்தபின் மூன்றாம் பாலினத்தவரை தனி நேர்வாகக் கருதி இனி வருங்காலங்களில் பெறப்படும் பாலின மாற்ற விண்ணப்பதாரர்கள் சார்ந்து உரிய திருத்தங்கள் மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்குறிப்பிட்ட இனங்களுக்கு ஆணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார் :-

I. 2012-ம் ஆண்டிற்கு பிறகு தேர்வெழுதிப் பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களாக இருக்குமாயின் அவர்களுக்கு புகைப்படமின்றி புதிய மதிப்பெண் சான்றிதழ் மறு அச்சழுத்தம் செய்து வழங்கலாம்.

II. மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பெயர் முழுமையாக மாற்றம் செய்யப்படுவதால், Bar Code இன்றி புதிய மதிப்பெண் சான்றிதழ் மறு அச்சழுத்தம் செய்து வழங்கலாம்.

III. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் பராமரிக்கப்படும் மதிப்பெண் அட்டவணைப் பதிவேட்டினில் மூன்றாம் பாலினத்தவர் சார்ந்து பாலினம் T என பதிவு செய்யலாம்.

IV. பிறப்பில் ஆணா பெண்ணா எனக் கண்டறியப்படாமல் பின்னர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ மாறிடும் தேர்வர்கள் சார்ந்து உரிய திருத்தத்தினை மேற்கொள்ளலாம்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, பள்ளிகளில் பயின்று, இடைநிலை / மேல்நிலை ஆகிய பொதுத் தேர்வுகளை எழுதும் மாணாக்கர்கள், பாலின மாற்றம் அடைந்த பிறகு, தாம் மூன்றாம் பாலினத்தவர் என தெரிவித்து, பெயர் மாற்றம் செய்யக் கோரும் நிகழ்வுகளில், மருத்துவ அறிக்கை, அரசிதழ் வெளியீடு, தமிழ்நாடு திருநங்கையர் நலவாரியம் / சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் வழங்கப்படும் அடையாள அட்டை அல்லது அரசால் வழங்கப்படும் ஏதேனுமொரு அடையாள அட்டை முதலிய ஆவணங்களின் அடிப்படையில், பெறப்படும் பாலின மாற்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை தனி நேர்வாகக் கருதி, கீழ்க்காணுமாறு திருத்தம் மேற்கொள்ளவும், புதிய சான்றிதழ் வழங்கவும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது :-

I. பாலின மாற்ற விண்ணப்பதாரர்கள் 2012-ம் ஆண்டிற்கு பிறகு பொதுத் தேர்வெழுதிப் பெற்ற மதிப்பெண் சான்றிதழ்களாக இருக்குமாயின் அவர்களுக்கு புகைப்படமின்றி புதிய மதிப்பெண் சான்றிதழ் மறு அச்சழுத்தம் செய்து வழங்க அனுமதி.

II. மூன்றாம் பாலினத்தவர்களுக்கு பெயர் முழுமையாக மாற்றம் செய்யப்படுவதால், Bar Code இன்றி புதிய மதிப்பெண் சான்றிதழ் மறு அச்சழுத்தம் செய்து வழங்க அனுமதி.

III. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் பராமரிக்கப்படும் மதிப்பெண் அட்டவணைப் பதிவேட்டினில் மூன்றாம் பாலினத்தவர் சார்ந்து பாலினம் T என பதிவு செய்ய அனுமதி.

IV. பிறப்பில் ஆணா பெண்ணா எனக் கண்டறியப்படாமல் பின்னர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ மாறிடும் தேர்வர்கள் சார்ந்து மதிப்பெண் சான்றிதழ்களில் உரிய திருத்தத்தினை மேற்கொள்ள அனுமதி.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ. மதுமதி
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை -600 006,

**<u>நகல்</u>**
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-600 006.
பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண்.075237/M1/E3/2024 நாள். .11.2024 பிரிவு அலுவலர் 05/11/24

(நகல்) தகவலுக்காக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்
முதன்மை கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.
நகல்

பொ.இ. இயக்குநருக்காக